தமிழ்நாட்டில் பட்டு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில்

# 11 பேருக்கு ரூ.8.25 லட்சம் பரிசுத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 27 -

**தமிழ்நாட்டில் பட்டுவளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த இரண்டு பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று விதைக் கூடு உற்பத்தியாளர்கள், சிறந்த மூன்று தானியங்கி மற்றும் பல முனை பட்டு நூற்பாளர்கள் என 11 நபர்களுக்கு ரூ.8.25 இலட்சம் பரி சுத்தொகைக்கான காசோலைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் வழங்கி சிறப்பித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.03.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில், பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் விதைக்கூடு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் சிறந்த இரண்டு பட்டு விவசாயிகள், சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்கள், சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத்தொகையாக 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி சிறப்பித்தார்.

2024-25 ஆம் ஆண்டிற்கான பட்டுவளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், நமது மாநிலத்தில் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/ ரூபாய், 75,000/ரூபாய் மற்றும் 50,000/ ரூபாய் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும் எனவும், தரமான விதைப் பட்டுக்கூடு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/ ரூபாய், 75,000/ ரூபாய் மற்றும் 50,000/ ரூபாய் ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் என்றும், தரமான பட்டு நூல் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவில் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு தலா முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே 1,00,000/ ரூபாய், 75,000/ரூபாய் மற்றும் 50,000/ ரூபாய் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும் எனவும், இதற்கென 9 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளும், மூன்று சிறந்த விதைக்கூடு உற்பத்தியாளர்களும், மூன்று சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளர்களும், மூன்று சிறந்த பலமுனை பட்டு நூற்பாளர்களும் தேர்வுக்குழுவினால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

அதன்படி, மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த பட்டு விவசாயிக்கான முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திரு சு.ஜேக்கப் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வை. அருள்குமரன் அவர்களுக்கும்;

மாநில அளவில் சிறந்த விதைக்கூடு உற்பத்தியாளருக்கான முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.நா.மஞ்சுநாதா அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ச.நாகராஜ் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.சே.சாந்த மூர்த்தி அவர்களுக்கும்;

மாநில அளவில் சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளருக்கான முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மு. முகமது மதீனுல்லா அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ச.சேகர் அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஆர். சுபத்ரா அவர்களுக்கும்;

மாநில அளவில் சிறந்த பல முனை பட்டு நூற்பாளருக்கான முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.க.பிரகாஷ் அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஜெ. வேதவள்ளி அவர்களுக்கும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.எஸ். ரொசாரியோ லாசர் அவர்களுக்கும்;

என மொத்தம் 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலைகளை 11 பட்டு விவசாயிகள், விதைக்கூடு உற்பத்தியாளர்கள், தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைச் செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர் திருமதி.கி.சாந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 100 நாள் வேலைத் திட்ட பாக்கியை வட்டியோடு கொடுப்பீர்களா?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 27 -

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று (மார்ச் 25) கேள்வி நேரத்தின் போது தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, 100 நாள் வேலைத் திட்டம் பற்றிய கேள்வியை எழுப்பினார்.



"மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி (நூறு நாள் வேலை வாய்ப்பு) திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய ஊதியத்தை, 15 நாட்கள் தாமதம் செய்தால் அதற்குண்டான வட்டியைச் சேர்த்து தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்பது இத் திட்டத்தின் விதி. தமிழ்நாட்டில் உபகரணங்கள் ஊதியம் என்ற வகையில சுமார் 4 ஆயிரத்து 34 கோடி ரூபாய் கடந்த ஐந்து மாதங்களாக நிலுவையில் உள்ளது. இதுகுறித்து எங்கள் முதலமைச்சர் அவர்களும் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நாங்களும் துறை அமைச்சரை சந்தித்து, இந்த நிதியை விரைந்து வழங்குமாறு வேண்டுகோள் வைத்தோம். நாங்கள் இன்னும் அந்த நிதிக்காக காத்திருக்கிறோம். எப்போது அந்த நிதியை விடுவிப்பீர்கள்? ஏற்கனவே ஐந்து மாதங்களாக பாக்கி இருக்கிறது. எனவே வட்டியும் சேர்த்து வழங்குவீர்களா?" என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்விக்கு ஒன்றிய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் சந்திரசேகர் பெம்மசனி பதிலளிக்கையில்,

"இந்த திட்டம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தால் துவங்கப்பட்ட திட்டம். இந்த திட்டத்தின் விதிகளின்படி 15 நாட்களுக்கு மேல் நிதி நிலுவையில் வைக்கப்பட்டிருந்தால் 16 ஆம் நாளில் இருந்து 0.05% வட்டி வழங்கப்பட வேண்டும். மேலும் நிதி தாமதமானால், முதலில் மாநில அரசு தொகையை செலுத்திட வேண்டும், பிறகு அதை ஒன்றிய அரசு கொடுத்துவிடும் என்பது தான் விதிகளில் இருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு இத்திட்டத்தின் கீழ் 7 ஆயிரத்து 300 கோடி ரூபாய் இதுவரை வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7 கோடி. உத்திர பிரதேசத்தின் மக்கள் தொகை 20 கோடி. உத்திரப்பிரதேசத்தை விட தமிழ்நாடு அதிக நிதியை பெற்றிருக்கிறது. எனவே நிதி கொடுக்கவில்லை என்ற கேள்விக்கு இடமில்லை" என்று பதிலளித்துள்ளார்.

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# கருப்பசாமி பாண்டியன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 27 -

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கருப்பசாமி பாண்டியன் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கருப்பசாமி பாண்டியன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.



கருப்பசாமி பாண்டியன் 1977இல் ஆலங்குளம், 1980 இல் பாளையங்கோட்டை, 2006இல் தென்காசி தொகுதிகளில் இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர் ஆவார்.

நீண்டகாலம் அவையின் உறுப்பினராக இருந்த அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் உடனடியாக இரங்கல் தீர்மானம் கொண்டு வந்துள்ளோம்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அரசியல் இயக்கங்களைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்ட அறிவிப்பு!...

முதல் பக்கத் தொடர்ச்சி

ஆங்கிலம் ஆகிய இருமொழிக் கொள்கையே செயல்பாட்டில் இருக்கும்.

இது தமிழ்நாட்டுக்கு பேரறிஞர் அண்ணா அளித்த மாபெரும் கொடை! இது கொள்கை மட்டுமல்ல; தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சட்டம்!

தாய் நிலத்துக்கு தமிழும் உலகத் தொடர்புக்கு ஆங்கிலமும் என்று அண்ணா வழித்த சட்டம் அது. தமிழிலும் ஆங்கிலத்திலும் கரைகண்ட அவர் வழித்துக் கொடுத்த சட்டம் அது. இந்த இருமொழிக் கொள்கை தான் அரை நூற்றாண்டு காலமாக நம் தமிழ்நாட்டை வளர்த்து வந்துள்ளது.

உலகளாவிய பரப்பில் நமது தமிழ் மக்கள் வாழவும், ஆளுமை செலுத்தவும், உயர்த்தவும், உன்னதமான உயரத்தை அடையவும் வழிவகுத்த கொள்கை இந்த இருமொழிக் கொள்கைதான். எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல நாம்; இந்த இரு மொழிகளே போதும் என்று சொல்பவர்கள் நாம்.

**அண்டை மாநிலங்களும் உணர்ந்துள்ளன!**

யார் எந்த மொழியைக் கற்பதற்கும் தடையாக நிற்பதில்லை. அதே நேரத்தில், தாய்மொழியாம் தமிழை அழிக்க நினைக்கும் ஆதிக்க மொழி எதுவாக இருந்தாலும் அதை அனுமதிப்பதில்லை என்பதால்தான் இருமொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறோம்.

மொழிக் கொள்கையில் தமிழ்நாடு வகுத்துள்ள பாதையும், அதன் உறுதியான நிலைப்பாடுமே சரி என்பதை நமது அண்டை மாநிலங்கள் தொடங்கி, இந்தியாவின் பல மாநிலங்களும் இப்போது உணர்ந்து வருவதைப் பார்க்கிறோம்.

> **இந்தித் திணிப்புக்கு முற்றுப்புள்ளி!**
>
> **இந்தி மொழித் திணிப்பு என்பது, ஒரு மொழித் திணிப்பு மட்டுமல்ல; பண்பாட்டு அழிப்பாக அமையும் என்பதால்தான் இதில் உறுதியாக இருக்கிறோம்; இருப்போம்!**
>
> **இந்த மொழித் திணிப்பின் மூலமாக மாநிலங்களை, மாநில மொழிகளை, ஒரு இனத்தை ஆதிக்கம் செலுத்த நினைக்கிறார்கள். இதற்கு ஒட்டுமொத்தமாக முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.**

இன்னொரு மொழியைத் திணிக்க அனுமதித்தால், அது நம் மொழியை மென்று தின்று விடும் என்பதை நாம் வரலாற்றுப் பூர்வமாக உணர்ந்தவர்கள் என்ற அடிப்படையில்தான் இருமொழிக் கொள்கையை சிக்கெனப் பிடிக்கிறோம்.

இந்தி மொழித் திணிப்பு என்பது, ஒரு மொழித் திணிப்பு மட்டுமல்ல; பண்பாட்டு அழிப்பாக அமையும் என்பதால்தான் இதில் உறுதியாக இருக்கிறோம்; இருப்போம்!

இந்த மொழித் திணிப்பின் மூலமாக மாநிலங்களை, மாநில மொழிகளை, ஒரு இனத்தை ஆதிக்கம் செலுத்த நினைக்கிறார்கள். இதற்கு ஒட்டுமொத்தமாக முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

**மொழித் திணிப்புகளும் நிதி அநீதிகளும்!**

மாநிலங்களை தங்களது கொத்தடிமைப் பகுதிகளாக நினைப்பதால்தான் இதுபோன்ற மொழித் திணிப்புகளும், நிதி அநீதிகளையும் செய்கிறார்கள்.

எனவே, இந்தியாவின் கூட்டாட்சித் தன்மையைக் காக்கவும் மாநிலங்களின் சுயாட்சியை வென்றெடுக்கவும் மிகச்சரியான முன்னெடுப்புகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

மாநில சுயாட்சியை உறுதி செய்து, மாநில உரிமைகளை நிலைநாட்டினால்தான் தமிழ்மொழியையும் காக்க முடியும், தமிழினத்தையும் உயர்த்த முடியும் என்பதை உறுதிபடத் தெரிவித்து, அதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடுவேன் என்றும் அறிவித்து இந்தளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

தமிழ் - இந்தோ - ஐரோப்பிய மொழிகளின்

# வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, மார்ச் 27 -

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத் துறையும் இணைந்து உருவாக்கிய தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி நூல்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறையும் இணைந்து உருவாக்கிய தமிழ்இந்தோஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல்ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின் பொது முன்னுரை நூலினையும், முதல் தொகுதி நூலினையும் வெளியிட்டார்.

2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்மொழியின் தொன்மையையும் செம்மையையும் நிலைநாட்டிட, பிற உலக மொழிகளுடன் தமிழின் மொழியியல் உறவு குறித்து அறிவியல் பூர்வமான ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமாகும் என்றும், தமிழ் மொழிக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்திற்கும் இடையிலான உறவை வெளிக்கொணரும் வகையில், தமிழ் வேர்ச்சொல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான வேர்ச்சொல் உறவினை ஆய்வுசெய்யும் இத்திட்டம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேற்பார்வையில் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் கு. அரசேந்திரன் அவர்களின் தலைமையில் ஜூலை 2022ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் முதன்மைப் பதிப்பாசிரியர் உட்பட 20 அறிஞர்கள் பணி செய்து வருகின்றனர். இத்திட்டத்தைச் செயல்படுத்த 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தோ-ஐரோப்பிய மொழிகள் யாவும் 461 வேர்ச்சொற்களில் உருவானதென ஆங்கில வேர்ச்சொல் அறிஞர் வால்டர் ஸ்கீட் (Walter Skeat) கண்டுபிடித்துள்ளார். இந்த 461 வேர்ச்சொற்களில் 300 வேர்ச்சொற்கள் தமிழுடன் உறவுடையன என இக்குழு கருதுகிறது. இந்த ஆய்வு முடிவுகளை 12 தொகுதிகளாக வெளியிடத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத் துறையுடன் 13.01.2025இல் ஒப்பந்தம் மேற்கொண்டது.

அதன் அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின் பொது முன்னுரை நூலினையும், முதல் தொகுதி நூலினையும் இன்றைய தினம் வெளியிட, ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் இந்தியப் பிரிவின் மேலாண்மை இயக்குநர் சுகந்தா தாஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இப்பொது முன்னுரை நூல், தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான உறவுகள் பற்றி இத்தாலிய அறிஞர் அல்பெரடோ டிரோம்பெட்டி (Alfredo Trombetti), ஜெர்மானிய அறிஞர் மேக்ஸ் முல்லர் (Max Muller), அயர்லாந்து அறிஞர் ராபர்ட் கால்டுவெல் (Robert Caldwell), டென்மார்க் அறிஞர் ஹோல்ஜர் பெடர்சன் (Holger Pederson), ரஷ்ய அறிஞர் இல்லிச் விட்ச் (IllichSvitych), அமெரிக்க அறிஞர்கள் ஸ்டீவன் ஹில்யர் லெவிட் (Stephen Hillyer Levitt), ஆலன் பாம்ஹார்ட் (Allan Bomhard) உள்ளிட்ட சிறந்த மொழி அறிஞர்களின் கருத்துகளுடன் இத்திட்டத்தின்கீழ் வெளிவரவுள்ள 12 தொகுதிகளையும் கற்பதற்கான வாயிலாக (gateway) அமைந்துள்ளது.

மேலும், முதல் தொகுதி நூலில் 19 தமிழ் வேர்ச்சொற்களிலிருந்து இலத்தீன், கிரேக்கம், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மேலை இந்தோஐரோப்பிய மொழிகளின் சொற்களும் மற்றும் சமஸ்கிருதம், பாலி, சிங்களம் போன்ற பலகீழை இந்தோஐரோப்பிய மொழிகளின் சொற்களும் உருவான வரலாறு, கருதுகோள் (Hypothesis) அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது.

இதில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்தர மோகன் பி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் வே. ராஜாராமன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல்ஒப்பீட்டு அகராதித்திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் கு.அரசேந்திரன், ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இந்தியப் பிரிவின் வெளியீட்டு இயக்குநர் திருமதி மல்லிகா கோஷ், ஆக்சுபோர்டு பல்கலைக் கழகப் பதிப்புத்துறை இந்தியப் பிரிவின் அகராதிகள் தலைவர் திருமதி ஷர்மிளா குகா, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக இணை இயக்குநர் முனைவர் தே. சங்கர சரவணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.